**ஜனவரி – 14**

# தேசியச் செய்திகள்

## அரியவகை நோய்கள் குறித்த தேசிய வரைவுக் கொள்கை

- ஆயுஷ்மான் பாரத் என்ற திட்டத்தின் கீழ் அரியவகை நோய்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக ரூ. 15 லட்சம் மதிப்பிலான நிதியை வழங்க இந்தக் கொள்கை முன்மொழிந்துள்ளது. இந்த நிதியை ஒற்றைத் தவணையில் ஒரே ஒரு முறை வழங்க பரிந்துரைக்கப் பட்டுள்ளது.
- இந்தக் கொள்கையானது மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகத்தால் உருவாக்கப் பட்டுள்ளது.
- இந்தக் கொள்கையின் கீழ், சில மருத்துவ நிறுவனங்கள் அரிய நோய்களுக்கான சிறப்புமிகு மையமாக சான்றளிக்கப்பட இருக்கின்றன.
- இதில் புது தில்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனை, லக்னோவில் உள்ள சஞ்சய் காந்தி முதுகலை மருத்துவ அறிவியல் நிறுவனம், மும்பையில் உள்ள கிங் எட்வர்ட் மருத்துவ நிறுவனம் மற்றும் இதர நான்கு நிறுவனங்களும் உள்ளடங்கும்.

## ASER அறிக்கை 2019

- பிரதாம் என்ற ஒரு இலாப நோக்கற்ற அமைப்பானது தனது வருடாந்திர அறிக்கையான “2019 ஆம் ஆண்டில் கல்வியின் நிலை” என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது இந்தியாவில் உள்ள 26 மாவட்டங்களில் பள்ளியில் பயிலும் 4 முதல் 8 வயதுக்குட்பட்ட 36,000 குழந்தைகளிடம் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின் அடிப்படையில் அமைந்துள்ளது.

### *முக்கியக் குறிப்புகள்*

- சுமார் 56.8% சிறுமிகள் மற்றும் 50.4% சிறுவர்கள் அரசுப் பள்ளிகளில் சேர்ந்துள்ளனர் என்று இந்த அறிக்கை கூறுகின்றது.
- அரசுப் பள்ளிகளில் சேர்க்கப்படும் சிறுமிகளின் எண்ணிக்கையானது சிறுவர்களின் எண்ணிக்கையை விட அதிகமாக இருக்கின்றது.
- அதே சமயத்தில், தனியார் பள்ளிகளில் சேரும் சிறுவர்களின் எண்ணிக்கையானது சிறுமிகளின் எண்ணிகையை விட அதிகமாக இருக்கின்றது.
- கல்விச் சட்டம், 2009ன் (கல்வி உரிமைச் சட்டம்) படி, குழந்தைகள் 6 வயதில் பள்ளியில் முதலாம் வகுப்பில் சேர்க்கப்பட வேண்டும்.
- ஆனால் இந்த அறிக்கையின் படி, முதலாம் வகுப்பில் சேர்க்கப்படும் ஒவ்வொரு 10 குழந்தைகளில் 4 குழந்தைகள் 5 வயதுக்குக் குறைவானவர்களாக உள்ளனர்.

## ரயில்வே செய்திகள்

- இந்திய ரயில்வேவானது மின்னணு முறையிலான அலுவலகம் என்ற திட்டத்தின் இரண்டாம் நிலையைச் செயல்படுத்தும் பொருட்டு மினி ரத்னா பிரிவைச் சேர்ந்த ஒரு பொதுத் துறை நிறுவனமான ரெயில்டெல் என்ற நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- மின்னணு முறையிலான அலுவலக அமைப்பு என்பது ஒரு ஒருங்கிணைந்த கோப்பு

மேலாண்மை அமைப்பாகும். இது கோப்புகளின் தரவு, உள்ளடக்கம் ஆகியவற்றை மின்னணு முறையில் நிர்வகிக்க ஊழியர்களுக்கு உதவ இருக்கின்றது.

- மின்னணு முறையிலான அலுவலக அமைப்பானது காகிதமற்ற கலாச்சாரத்தை ஏற்றுக் கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது செயல்பாட்டுச் செலவைக் குறைக்க உதவுவதோடு கார்பன் அடிச்சுவட்டையும் குறைக்க உதவ இருக்கின்றது.
- இது தேசியத் தகவல் மையத்தினால் (National Informatics Centre - NIC) செயல்படுத்தப்பட இருக்கின்றது.
- தெற்கு மத்திய ரயில்வே மற்றும் பாரத வங்கி ஆகியவை இந்தியாவில் உள்ள 585 ரயில் நிலையங்களில் வங்கிச் சேவையைச் செயல்படுத்துவதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.
- ரயில் நிலையங்களில் செயல்பட இருக்கும் இந்த வங்கிச் சேவையானது அனைத்து ரயில் நிலையங்களிலும் சீரான முறையில் பணம் அனுப்பும் வசதியை வழங்க இருக்கின்றது.

***NIC***

- தேசியத் தகவல் மையமானது 1976 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இது மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றது.
- இது அரசாங்கத்தின் தகவல் தொழில்நுட்பச் சேவைகளை வழங்குவதற்காகவும் டிஜிட்டல் இந்தியாவின் முன்முயற்சிகளை வழங்குவதற்காகவும் உள்கட்டமைப்பு வசதிகளை அளிக்கின்றது.

## நீட் முன்னெடுப்பு

- நீட் (NEAT) என்ற ஒரு முன்னெடுப்பிற்காக தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களில் ஒன்றான NIIT (தேசியத் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் - National institute of Information Technology) என்ற ஒரு பன்னாட்டு நிறுவனமானது தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- நீட் குறித்த மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் (மனித மற்றும் வள மேம்பாட்டு) தொலைநோக்குப் பார்வையைச் செயல்படுத்துவதற்காக NIIT ஆனது அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுவுடன் (All India Council for Technical Education - AICTE) இணைந்துச் செயல்பட இருக்கின்றது.
- NIIT ஆனது 1991 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இது உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றை மேற்கொள்வதற்கான ஒரு இலாப நோக்கமற்ற பல்கலைக் கழகமாகும்.
- செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி கற்றல் செயல்முறையைத் தனிப் பயனாக்குவதற்காக தொழில்நுட்பத்திற்கான தேசியக் கல்வி கூட்டணியானது (National Educational Alliance for Technology - NEAT) தொடங்கப் பட்டுள்ளது.
- நீட் திட்டமானது AICTE ஆல் செயல்படுத்தப் படுகின்றது.

## தீவுகள் மேம்பாட்டு ஆணையத்தின் ஆறாவது கூட்டம்

- புது தில்லியில் நடத்தப்பட்ட தீவுகள் மேம்பாட்டு ஆணையத்தின் ஆறாவது கூட்டத்திற்கு மத்திய உள்துறை அமைச்சர் தலைமை தாங்கினார்.
- இந்தச் சந்திப்பானது "புதிய உச்சத்தை எட்டுவதற்காக தீவுகளில் பசுமை மேம்பாடு"

என்பதின் மீது கவனத்தைச் செலுத்தியது.

- தீவுகளின் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக தீவுகள் மேம்பாட்டு ஆணையமானது (Island Development Agency - IDA) அறிவியல் பூர்வமாக மதிப்பிடப்பட்ட நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை நிர்ணயித்துள்ளது.
- அந்தமான் நிக்கோபர் தீவுக் கூட்டங்களில் உள்ள நான்கு தீவுகளிலும் லட்சத்தீவுக் கூட்டங்களில் உள்ள ஐந்து தீவுகளிலும் இந்த திட்டமானது செயல்படுத்தப்பட இருக்கின்றது.
- இந்தத் திட்டத்தின் இரண்டாம் நிலையில் அந்தமான் நிக்கோபர் தீவுக் கூட்டங்களில் உள்ள மேலும் 12 தீவுகள் மற்றும் லட்சத்தீவு தீவுக் கூட்டங்களில் உள்ள மேலும் 5 தீவுகள் ஆகியவை சேர்க்கப்பட இருக்கின்றன.

# சர்வதேசச் செய்திகள்

## SCO-இன் 8 அதிசயங்கள்

- 2018 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் பிரதமர் மோடியால் திறந்து வைக்கப்பட்ட ஒற்றுமைக்கான சிலையானது SCO (ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு - Shanghai Cooperation Organization) அமைப்பின் 8 அதிசயங்களில் ஒன்றாகச் சேர்க்கப்பட்டுள்ளது.
- இந்தச் சிலையானது சர்தார் வல்லபாய் படேலுக்கு ஒரு முக்கியமான நினைவுச் சின்னமாக இருந்து வருகின்றது.
- சர்தார் வல்லபாய் படேலின் 143வது பிறந்த தினத்தின் போது இந்த சிலையானது திறந்து வைக்கப்பட்டது.



- இது உலகின் மிக உயரமான சிலையாகும்.

***8 அதிசயங்கள்***

- இந்தியாவில் உள்ள ஒற்றுமைக்கான சிலை
- சீனாவில் உள்ள டேமிங் அரண்மனை

- தஜிகிஸ்தானில் உள்ள நவ்ரூஸ் அரண்மனை
- பாகிஸ்தானில் இருக்கும் முகலாயர்களின் பாரம்பரியம்
- கஜகஸ்தானில் உள்ள தம்கலி மலையிடுக்கு
- உஸ்பெகிஸ்தானில் உள்ள போ-இ-கலான் வளாகம்
- ரஷ்யாவில் உள்ள தங்க வளையம்
- பாகிஸ்தானின் லாகூரில் உள்ள முகலாயர்களின் பாரம்பரியம்.

# பொருளாதாரச் செய்திகள்

## ஆளில்லா விமானத்திற்கான விதிமுறைகள்

- நாட்டில் உள்ள அனைத்து ஆளில்லா விமானங்களையும் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும் என்று இந்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆளில்லா விமானத்திற்கும் ஒரு தனித்துவ அடையாள எண் (Unique Identification Number - UIN) வழங்கப்பட இருக்கின்றது.



- பயனர்கள் தங்களது ஆளில்லா விமானங்களைப் பதிவு செய்வதற்காக "டிஜிட்டல் ஸ்கை" என்ற ஒரு நிகழ்நேர இணைய தளத்தை இந்திய அரசு தொடங்கியுள்ளது.
- ஆளில்லா விமானங்களின் உரிமையாளர்கள் தங்களது ஆளில்லா விமானங்களைப் பதிவு செய்யத் தவறினால் விமானச் சட்டம், 1934 மற்றும் இந்திய தண்டனைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேரிடும்.
- விமானச் சட்டமானது இந்தியாவில் விமானப் போக்குவரத்தை நிர்வகிக்கின்றது.
- ஈரான் நாட்டின் இராணுவப் படைத் தலைவரான சுலைமானி 2020 ஆம் ஆண்டு ஜனவரியில் பாக்தாத் விமான நிலையத்தில் அமெரிக்க இராணுவத்தின் ஆளில்லா விமானத்திலிருந்து ஏவப்பட்ட ஏவுகணையால் கொல்லப்பட்டார்.

### தரக்குறியீடு இடப்பட்ட தங்க கலைப் பொருட்கள்

- இந்திய நகைக்கடை விற்பனையாளர்கள் 14, 18 மற்றும் 22 காரட் தங்கத்தால் செய்யப்பட்ட தரக்குறியீடு இடப்பட்ட தங்கக் கலைப் பொருட்களை விற்க அனுமதிக்கப் படுவார்கள் என்று இந்திய அரசு அறிவித்துள்ளது.
- மேலும், அனைத்து நகைக்கடை விற்பனையாளர்களும் தரக்குறியீட்டு அடையாளத்தைப் பெறுவது கட்டாயமாக்கப் பட்டுள்ளது.
- தற்போது தங்கத்திற்கான தரக் குறியீடானது விருப்பத் தேர்வாக உள்ளது.
- கட்டாயமாக கடைபிடிக்கப்பட வேண்டிய இந்த விதிமுறையானது 2021 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் தேதி முதல் செயல்படுத்தப்பட இருக்கின்றது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### புதிய எரிபொருள்

- இந்தியக் கடற்படைக்காக திருத்தப்பட்ட தொழில்நுட்ப விவரக்குறிப்புகளுடன் புதிய எரிபொருள் மேம்படுத்துதலை மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சகம் அறிவித்து உள்ளது.
- அதிக தீப்பற்றுதல் கொண்ட அதிவேக டீசல் (High Flash High Speed Diesel - HFHS) ஆனது வெளியிடப் பட்டது.
- புதிய எரிபொருளை அறிமுகப்படுத்தியதன் நோக்கம் கார்பன் அடிச்சுவட்டைக் குறைப்பதாகும்.

### ஷாப்பர் (Shopper) தீம்பொருள்

- ஷாப்பர் தீம்பொருள் (malware) என்ற புதிய தீம்பொருளின் பயன்பாடானது திறன்பேசியைப் பயன்படுத்துபவர்களிடையே அதிகரித்து வருகின்றது.
- இந்தத் தீம்பொருளானது பயனர்களால் கோரப்படாத விளம்பரங்களைத் திரையிடச் செய்கின்றது மற்றும் போலியான மதிப்புரைகளை ஒளிரச் செய்கின்றது.
- ஷாப்பர் தீம்பொருளுக்கு முன்பு, இது போன்ற ஒரு மிகப்பெரிய பிரச்சினையானது "டிராப்பர் தீம்பொருளால்" உருவாக்கப் பட்டது.
- 2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை இந்தத் தீம்பொருளின் பிரச்சினை இருந்தது.
- இது 14.23% இந்தியர்களைப் பாதித்துள்ளது.
- இந்தத் தீம்பொருளினால் ரஷ்யா அதிகமாக பாதிக்கப் பட்டுள்ளது.

### இலகுவான போர் விமானம் - தேஜாஸ்

- இந்திய அரசானது சுமார் 200 போர் விமானங்களை வாங்க இருக்கின்றது.
- இந்த 200 விமானங்களில், 83 போர் விமானங்கள் இலகுவான போர் விமானமான தேஜாஸ் மார்க் 1 ஏ என்ற வகையைச் சேர்ந்ததாகும். இவை எச்ஏஎல் (இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட்) நிறுவனத்திடமிருந்து வாங்கப்பட இருக்கின்றன.



*தேஜாஸ் பற்றி*

- இலகுவான போர் விமானமான தேஜாஸ் ஆனது 1980களில் எச்ஏஎல் (இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட்/ Hindustan Aeronautics Limited) மற்றும் ஏ.டி.ஏ (வான்வழிப் போக்குவரத்து வளர்ச்சி ஆணையம்/Aeronautical Development Agency) ஆகிய நிறுவனங்களால் வடிவமைக்கப்பட்டது.
- இது இந்தியாவின் மிக் - 21ஐப் பதிலீடு செய்து மாற்றியது.
- இதுவரை, இலகுவான போர் விமானமான தேஜாஸ் ஆனது இந்தியாவில் மட்டுமே செயல்பட்டு வருகின்றது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஆஸ்திரேலியக் கோலா கரடிகள்

- ஆஸ்திரேலியக் கோலா கரடி இனமானது ஆஸ்திரேலியாவில் ஏற்பட்ட காட்டுத் தீயினால் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது.
- ஆஸ்திரேலியா தனது நாட்டின் வெப்பமான ஆண்டாக 2019 ஆம் ஆண்டை பதிவு செய்துள்ளது.
- ஆஸ்திரேலியக் கோலா கரடிகள் "அருகி வரும் இனங்கள்" என்ற நிலையிலிருந்து "ஆபத்தான இனங்கள்" என்ற நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இந்த இனங்களின் 30% வாழ்விடங்கள் சமீபத்தில் ஏற்பட்ட தீ விபத்துகளால் அழிக்கப்பட்டுள்ளன.
- ஆஸ்திரேலியக் கோலா கரடி ஆனது ஆஸ்திரேலியாவைப் பூர்வீகமாகக் கொண்ட தாவர உண்ணி வகை விலங்குகளாகும்.
- இவை நியூ சவுத் வேல்ஸ், குயின்ஸ்லாந்து, விக்டோரியா மற்றும் தெற்கு ஆஸ்திரேலியாவின் கடலோரப் பகுதிகளில் காணப் படுகின்றன.
- ஆஸ்திரேலிய கோலா கரடிகள் பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு மன்றத்தின் சிவப்புப் பட்டியலில் “பாதிக்கப்படக்கூடிய இனங்கள்” என்ற நிலையின் கீழ் வைக்கப் பட்டுள்ளன.

*காட்டுத் தீ ஏன் கடுமையாக இருந்தது?*

- இந்தியப் பெருங்கடல் இருமுனையானது 2019 ஆம் ஆண்டில் அதன் சாதகமான நிலையில் இருந்தது.
- இதன் பொருள், கிழக்கு இந்தியப் பெருங்கடல் (ஆஸ்திரேலியாவின் வடமேற்கில் அமைந்துள்ளது) மேற்கு இந்தியக் கடலை விட குளிராக இருந்தது.
- இந்நிகழ்வானது ஆஸ்திரேலியாவில் வெப்பநிலையை அதிகரித்து, அந்நாட்டின் ஈரப்பதத்தைக் குறைத்தது.

- ஆஸ்திரேலியக் கண்டத்தில் வீசும் சூடான காற்றான மேலைக் காற்றுகள் ஆனவை காட்டுத் தீயை மேலும் அதிகரித்தன.



## முக்கிய தினங்கள்

### சித்தா தினம் - ஜனவரி 13

- 3வது சித்தா தினமானது ஜனவரி 13 ஆம் தேதி அன்று கொண்டாடப்பட்டது.
- ஒவ்வொரு ஆண்டும் அகத்தியர் பிறந்த தினமானது சித்தா தினமாக அனுசரிக்கப் படுகின்றது.
- இந்திய அரசின் ஆயுர்வேதம், யோகா & இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா & ஹோமியோபதி அமைச்சகமானது ஆயுர்வேதம் மற்றும் சித்த மருத்துவம் ஆகிய துறைகளில் ஆய்வுகளை ஒருங்கிணைத்து, ஊக்குவிக்கின்றது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★